# நட்புறவில் கபிலர் – பாரி

**முனைவர்.த.ராதிகா லட்சுமி,**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

ஒரு மொழியின் நிலைப்புத்தன்மைக்கான காரணங்களில் ஓர் குறிப்பிடத்தக்க காரணமாக அம்மொழியில் தோன்றிய புலவர்களின் புலமையையும், பண்பையும் குறிப்பிடலாம். செம்மொழியான தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றும் இலக்கியங்களுள் தலையாய சங்க இலக்கியத்தில் கவிபாடிப் புகழ்பெற்றவர் கபிலர். சங்கப்புலவர்களில் மிகுதியானப் பாடல்களைப் பாடியவர். நட்பிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர். புலவர்களால் மதிக்கப்பெற்ற, பாராட்டப்பட்ட புலவர் ஏறு. 'வாய்மொழிக் கபிலர்' என்றும் 'புகழ்க் கபிலர்' என்றும் 'செந்நாக் கபிலர்' என்றும், 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்றும் புகழப்பெற்றவர். நட்பிற்கு இலக்கணம் கூறவேண்டுமாயின் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார், பாரி – கபிலர், அதியமான் - ஔவையார் ஆகியோரின் நட்பை முன்னிறுத்தலாம். இருவரின் வாழ்க்கையில் பாரியோடு வாழ்ந்தது கபிலருக்கும் சிறப்பு, பாரிக்கும் சிறப்பு. தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துரைக்கும். புறநானூற்றின் வாயிலாக கபிலர் பாரியின் நட்புத்திறத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கபிலரின் வாழ்க்கை:**

உறையூர்ச் சேரியில் வாழ்ந்த ஆதி என்னும் புலைச்சிக்கும், பகவன் என்ற அந்தணர்க்கும் பிறந்த மக்கள் எழுவரில் கபிலரும் ஒருவராவார். ஓவ்வொருவரும் பிறந்த உடனே தம்மை விட்டுப் பிரிந்து செல்லும் தாய்க்கு ஆறுதலாக ஒவ்வொரு பாடலைப் பாடினர் என்று புகழொடு தோன்றிய கபிலர் பிறப்பினைக் கதையாக்குவர். குழந்தை பிறந்தவுடன் பாடலைப் பாடுதல் என்பது புராணக் கதைகட்குப் பொருந்துமே தவிர வரலாற்றாராய்ச்சிக்கு ஏற்றனவாகாது. எனினும் இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் என்ற உண்மையை இவர் காலத்தில் வாழ்ந்த புலவர் மாறோக்கத்து நப்பசலையார்,

"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்தணாளன்"

(புறநானூறு, பா.எ-126)

என்று சிறப்பிப்பதில் அறியமுடிகின்றது. மேலும் கபிலர் தாம் பாடிய பாடல்களில் தம்மை அந்தணர் என்று கூறிக்கொள்வதைக் காணமுடிகின்றது. கபிலரின் பாடல்களைக் கொண்டு இவரை

*அறியமுடிகிறதே தவிர இவரின் இளம்பருவ வாழ்க்கையோ, இல்லற வாழ்க்கையோ அறியப்படவில்லை.*

*“சங்கப்புலவர்களுள் தலைசான்றவர் கபிலர். புதுக்கூர்மையும் பாடும் வளமும் நிறைந்தவர். யாரினும் பாட்டெண்ணிக்கை மிகப் பாடியவர். யாரினும் சிறந்த வள்ளல் பாரியின் வாழ்க்கைத் தோழர். இவர்தம் ஓங்குயர் சிறப்புக்குப் பாடும் வன்மை ஒரு காரணம். பாரியின் உயிர்த் தோழமையும் ஒரு காரணம். புலவரைப் பாடிய பெருமையோடு பலரால் பாடப்பெற்ற பெருமையும் உடையவர் கபிலர். கபிலரின் செய்யுட்களை ஆராயுமுன் அவர்தம் நல்லிசை நம்மை ஆட்கொண்டு விடுகிறது”*

(தமிழ்க்காதல்- வ.சுப.மாணிக்கம் ப.273)

*அழுக்காறு இல்லாத அந்தணாளன் என்ற புகழுக்குரியவர் கபிலர். இவர் குறிஞ்சி நிலத்தின் இயற்கை எழில், செடி, கொடி, மரம், மற்றும் இனிய மணத்துடன் பலவண்ணங்களில் பூத்துக் குலுங்கிய மலர்களில் மனதைப் பறிகொடுத்து பல குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடி சங்கவிலக்கியத்திற்கே பெருமைச் சேர்த்தவர். அப்பழுக்கற்ற பாரியின் அன்பிற்குக் கட்டுப்பட்ட கபிலர் தன் வாழ்வின் பெரும்பகுதியைப் பாரியுடனான நட்பிற்காகவே பறம்பு மலையிலேயே கழித்ததை அறியமுடிகிறது. பாரி தம் மகளிரை மூவேந்தர்களுக்கு மணமுடித்துத் தரவியலாது என மறுத்ததும் மூவேந்தர்கள் சினந்தெழுந்தனர். பறம்புமலையின் செல்வவளம், பாரியின் வள்ளன்மை போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட மூவேந்தர்கள் மகட்கொடை மறுப்பால் பறம்பைக் கொள்ளையடிக்கத் துடித்தனர். மூவரும் இணைந்து பறம்பை அழித்துச் சிதைத்து செல்வங்களை அள்ளிச் சென்றனர். பாரியின் இறப்பிற்குப் பின்பு பாரிமகளிரைக் காக்க வேண்டிய கடமை முன்னிருக்க கபிலரால் உயிர்துறக்க முடியவில்லை. பாரிமகளிரை அழைத்துச் சென்று பல குறுநில மன்னர்களைக் கண்டு அவர்களை ஏற்குமாறு வேண்ட அவர்கள் மறுத்தனர். அவர்களின் மறுப்பிற்கான காரணம் வறியநிலையே என்பதை உணர்ந்த கபிலர் மகளிரை ஒரு அந்தணனிடம் ஒப்படைத்துவிட்டு சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடி பெரும்பரிசில் பெற்றார். பாரிமகளிரை மலையமான் திருமுடிக்காரியின் மக்கட்குச் சிறப்பாக மணம்முடித்து தன் கடமையை நிறைவேற்றினார். அதற்குப் பின்பு பாரியின் பிரிவுத்துயர் தாங்காத கபிலர் கனல்புகுந்து உயிர்துறந்ததாக தென்னிந்தியக் கல்வெட்டுச் சாசனம் குறிப்பிடுகிறது.*

*புணர்ச்சி குறித்த அகப்பாடல்களைக் கபிலர் பாரியின் இறப்பிற்கு பின்பு பாடியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் உயிர்நண்பர் பாரியின் இறப்பு, பறம்பின் சீர்குலைவு, பாரிமகளிரின் துயரநிலை, அவர்கட்கு நல்வாழ்வு நல்கவேண்டிய நிலை என்ற துயர்மிகுந்த வாழ்க்கையில் அகம்பாடும் மனநிலை அவர்க்கு அகன்றுப் போயிருக்கும் என்பதே எண்ணத்தக்கது. பாரியுடன் வாழ்ந்த காலத்தில் சில புறப்பாடல்களைப் பாடிய கபிலர் பாரியின் மறைவுக்குப்; பின் பாரிமகளிருக்காக சில புறப்பாடல்களைப் பாடியிருக்கலாம் எனக் கருதத்தோன்றுகிறது.*

**பாரியின் ஈகை:**

பொதுவாக சங்கப்புலவர்கள் மன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில்கள் பெற்று தம் பெரும்சுற்றத்தாரின் வறுமையைப் போக்கி வாழ்ந்தனர். கபிலர் பாரியின் வள்ளன்மையின் சிறப்பைப் பாட வந்து, அவன் மேன்மையை உணர்ந்து மயங்கியதால் தன் வாழ்க்கையைப் பாரியுடன் பறம்பு மலையிலேயே கழிக்கத் தொடங்கினார். வறுமையுடன் வாடும் குடும்பமோ, சுற்றமோ கபிலருக்கு இருந்திருக்க வாய்ப்பில்லை எனக் கருதத்தோன்றுகிறது.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந் நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே"

(புறநானூறு, பா.எ- 134)

காடு, நாடு, கடல், மலை, நிலம் என்ற வேறுபாடின்றி மேகம் மழையைப் பொழிவது போல உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி பெருமை, சிறுமை பாராட்டாமல் தன்னை நாடியவரின் துயரைத் தீர்க்கும் பாரியின் கொடைத்திறத்தை இகழ்வது போல் புகழ்ந்து கவிபாடி மகிழ்ந்தார். மக்களையும், இரவலரையும் காத்திடும் பாரியின் வள்ளன்மை அம்மாரியினும் மேம்பட்டது என்பதை வலியுறுத்துகிறார்.

**அன்பு நெஞ்சம்**

சூரியனுக்கு வெப்பம், நிலவுக்குக் குளிர்ச்சி, நீருக்குத் தண்மை, மலருக்கு மணம் என்று உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் இயற்கையான ஒரு பண்பு உண்டு. இதன்படி உயிருக்குப் பண்பாக இருப்பது அன்பு கொண்டு வாழ்வதே. அன்பற்ற உடல் என்புதோல் போர்த்தியவை. பாலை நிலத்தில் பட்டமரம் போன்றதே அன்பற்ற உயிர்வாழ்க்கை என்ற வள்ளுவரின் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. இரும்பண்பில் சிறந்த கபிலர் பாரியிடம் செலுத்திய அன்பு உயர்ந்தது. இவ்வன்பு பாரிமகளிர், பறம்புமலை, பறம்பில் வாழும் மக்கள் என்று முடியாமல் பகைவரிடமும் கூட தொடர்ந்து நாட்டைக் கைப்பற்றும் உபாயம் உரைக்கிறது.

உழுது விதைக்காமல் தானாக விளையும் நால்வகைப் பொருட்களைக் கொண்ட பாரியின் பறம்புமலையைப் பல்வேறு படைகளைக் கொண்டு வாள்முனையில் வெற்றிபெற இயலாது. நும் காதல் மகளிர் ஆடிப் பாடி விறலியராய்ப் பின்தொடர கையில் யாழுடன் வந்தால் பாரி தன் நாட்டையும், குன்றையும் பரிசிலாகத் தந்துவிடுவான் என்று உபாயம் உரைப்பதன் வாயிலாக மூவேந்தரும் நாணமுறும்படி இகழ்கிறார். இதில் மூவேந்தரின் செயல் முறையற்றது, மிகவும் நாணத்தக்கது என்றுரைத்து தன் நண்பன் பாரியையும், பறம்பையும் காத்திட முனைந்ததில் கபிலரின் முயற்சி வெளிப்படுகிறது.

பாரியின் பறம்பைப் பறித்துக்கொள்ள நினைக்கும் மூவேந்தர்க்கு அறிவுறுத்தும் பாடலில் பறம்பு நாடு முன்னூறு ஊர்களைக் கொண்டது. பரிசிலர் இவ்வூர்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்டதால் நீவிர் பாடினிராய் வந்தால் பாரி தன்னையே பரிசிலாகத் தருவான்.

"யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு – நீர் பாடினிர் செலினே"

(புறநானூறு, பா.எ- 110)

கபிலர் பாரியோடு தன் வாழ்வை இணைத்துக்கொண்டதால் தன்னையும் ஒப்பவைத்து உரைத்ததில் நட்பின் மேன்மை புலனாகின்றது.

மழை பெய்யாது பொய்த்துவிடினும் பறம்பு மலையின் முகடுகளிலிருந்து அருவி நீர் ஆறாக வழியும். வண்டுகள் மொய்க்கும் புதுமலர் தேன்த்துளிகள் வற்றாது பெருகி, விதைப்பதற்கு உழுதுகிடக்கும் நிலத்தின் ஊடே வாய்க்கால் போல் ஓடிப்பாயும், பறம்பு செழிக்கும். அதுபோன்று வழங்குதல் பொய்க்காத பாரி நீ விரும்பும் பரிசினை நல்கி உன்னை மகிழ்விப்பான் என்று கபிலர் விறலியை ஆற்றுப்படுத்துகிறார். தன்னை நாடி பொருள் பெற்றுச் செல்ல நம்பிக்கையுடன் வரும் இரவலர் அறிவற்றவராயினும், அற்பகுணம் படைத்தவராயினும் அதைப் பற்றிய சிந்தனையின்றி அவர் வேண்டும் பொருட்களைத் தந்து மகிழும் இயல்புடையவன் பாரி எனப் புகழ்ந்து போற்றும் கபிலர் அதற்கு சிறந்த உவமையைக் கையாளுகிறார். குவிந்த பூங்கொத்தும், இழிந்த இலையும் கொண்ட எருக்கம்பூவை ஒருவன் சூட்டினால் தெய்வம் விரும்பேம் என்று கூறாததைப் போல அறிவில்லாதோரும், புல்லிய குணத்தோரும் சென்று கேட்கினும் பாரி இரவலருக்கு உவந்தளிப்பவன் என்பதில் பாரியைத் தெய்வத்திற்கு நிகராக்குவதில் கபிலரின் நட்பு புலனாகின்றது.

**பிரிவுத்துயரம்**

இரங்கற்பாவிற்கான துறைகளைத் தொல்காப்பியம் புறத்திணைவியலில் கீழ்க்கண்டவாறு விளக்கும்.

"மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத்தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனையிழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்

காதலன் இழந்த தாபத நிலையும்"

(தொல்காப்பியம், புறத்திணையியல்,நூற்பா எண் -19)

கபிலர் தமது பாரி குறித்த பாடல்களில் பாரியாண்ட காலத்துப் பறம்பு பெற்றிருந்த உயர்வைக் குறிப்பிடுவதில் தம் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

பறம்பின் அன்றைய, இன்றைய நிலைகளைத் தொட்டுக் காட்டித் தம் ஆழ்ந்தத் துயரை கபிலர் வெளிப்படுத்துகிறார். நான்கு பாடல்கள் பாரியாட்சியில் பெருவளம் பெற்றிருந்த பறம்பு இனி அழிந்துவிடுமோ? என்று ஐயுறுவதாக அமைந்துள்ளன. நிழலில்லா நெடுவழியில் நின்ற மரமொப்ப முரசுடைய வேந்தரைக் காட்டிலும் மிகுதியாக இரவலர்க்கு ஈயும் வள்ளன்மையுடையவன் பாரி. கார் கால மழை பெய்ததால் இனிய காட்சி தரும் பொழுதில் யானையின் முதவகத்தில் தோன்றும் புள்ளிகளைப் போன்று தெறுழ் மலர் பூத்துக் குலுங்கியது. செம்மண்புற்றின்ப மோரோடு கூட்டிச் செய்யப்பட்ட புளிக்கறியையுடையது பாரி நாடு. சிறுதினையாகிய புதுவருவாயும் முன்பு உடையதாக இருந்தது. இனி அது கெட்டழிந்தது.

“மென் தினை யாணர்த்து: நந்தும் கொல்;லோ?”

(புறநானூறு, பா.எ- 119)

என்பதில் பாரி இறந்தபிறகு நாட்டின் வளமை கெட்டழிந்ததோடு இரவலர்க்குக் கொடுப்பாரும் இல்லையே என்று கையற்று இரங்கி கபிலர் உரைக்கிறார்.

“பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்ததுவே"

(புறநானூறு, பா.எ- 117)

கரிய சனி புகையோடு தோன்றினும், எத்திக்கும் இருள் படரினும், தெற்கு நோக்கி வெள்ளி நகரினும். வயல்களில் விளைச்சல் பெருக என்றும் பொய்க்காத மழையுடையது பாரியின் நாடு. இன்று பாரியை இழந்து நாட்டின் நலம் அனைத்தும் கெட்டு புன்புலமாயிற்று என கபிலர் வருந்துகிறார்.

மேலும், பறம்பு நாட்டில் புதிய வரகும், தினையும், எள்ளிளங்காய் கறுக்கவும், அவரைக்காய் பறிக்கவுமாக ஆரவாரமிகுந்திருந்தது. நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட முற்pற மதுவை, கூரை வீடுகளில் வாழும் மக்கள் குடிக்கக் கொடுப்பர். நறுநெய்யிலே கடலை வறுத்து, உண்ணச் சோறும் தருவர். இவ்வாறு வளமிகுந்திருந்த பறம்பு பாரியை இழந்து தன் வளமெல்லாம் இழந்து பாழாகிக் கிடக்கிறதே

"செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடு

வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ"

(புறநானூறு, பா.எ-120)

பாரி இறந்தபிறகு காப்பாரின்றி கெட்டழிவதைக் கபிலர் புலப்படுத்துகிறார். கூரிய வேலுடைய பாரி தேரினைக் கொடையாக அளிப்பவன். இவனுடைய பறம்பு நாட்டில் பாறைகளும், சிறுமலைகளும்

இருபுறமும் அமைய, எட்டாம் நாள் நிலவைப் போன்று வளைந்த கரையுடைய தெளிந்த நீர் நிறைந்த குளங்கள் பாரியின் மறைவுக்குப் பின் பாதுகாப்பார் இல்லாமல் கெட்டழிந்ததே!

"தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ"

(புறநானூறு, பா.எ-118)

பாரி இருந்த காலத்து அவன் நாடு இருந்த இன்பநிலையையும், அவன் மறைந்த காலத்து பறம்பு நாடுற்ற துன்பநிலையையும் எண்ணி கபிலர் வேதனையுறுகிறார். பறம்பு நாட்டிலுள்ள ஒரு சிறுகுளம் பறம்பையே உருவகப்படுத்துவதையும், பறம்பிற்கே ஆகிவருவதையும் அறியமுடிகிறது. ஒரு சிறிய நீர்க்குளத்தைப் படம்பிடிப்பதன் வாயிலாக கபிலர் தன் நண்பனின் இழப்பைத் தாங்கொணாத் துயரத்தை வெளிப்படுத்துகிறார்.

**நட்புக்கடமை**

"அற்ற குளத்தின் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் அக்குளத்தி;ற்
கொட்டீயும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு"

(மூதுரை-ஔவையார். பா.எ-17)

என்பதங்கிணங்க துன்பம் வந்தபோது நட்புறவிற்காய் தானே தந்தைக் கடமையை ஏற்ற பெருந்தகைக் கபிலர்.

பாரியின் இறப்பால் விளைந்த பெருந்துயரை எடுத்துரைக்க கபிலர் பறம்பில் முன்பு நடந்த நிகழ்ச்சியையும், தற்போது நடக்கின்ற நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுக் காட்டுவதன் வாயிலாக கையறுநிலை வெளிப்படுகிறது.

"மகளிர் புன்மூசு கவலைய முள் முடை வேலிப்
பஞ்சிமுன்றில், சிற்றில் ஆங்கண்,
பீரை நாறிய சுரை இவர் மருங்கின்
இத்திலைக் குப்பை ஏறி உமணர்
உப்புஒய் ஒழுகை எண்ணுப மாதோ
நோகோ யானே! தேய்கமா காலை!...
பாரியது அருமை அறியார் போர் எதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணுவோரே"

(புறநானூறு, பா.எ-116)

பூஞ்சோலையில் மயில் ஆடவும், மலையின் மீதேறி ஆண்குரங்கு தாவி விளையாடவும், அக்குரங்குகள் உண்டு வெறுத்தலால், உரிய காலமன்றியும் மரங்கள் பலவும் காயும், பழமும் என்று விளைந்து கொடுக்கும் புதுவருவாயுடையது பறம்பு மலை. அம்மலையின் உயர்ந்த சிகரத்தில் ஏறிய பாரி மகளிர் தம் தந்தையின் அருமையறியாதவராய்ப் போர் செய்வதற்கு வந்த அரசரின் பொன்கலன் அணிந்த மனம் செருக்குற்ற குதிரைகளை எண்ணுவர். இப்போது புல் மொய்த்த கவர்த்த வழியினையும், முள் நெருங்கியசுரை படர்ந்தவிடத்தில் ஈத்திலை குப்பையின் மீதேறி உமணர் உப்புச் செல்லும் சகடத்தை எண்ணுவர். இதை எண்ணி வருந்துவேன் யான். எனது வாழ்நாள் கெடுவதாக!

பாரி வாழ்ந்த காலத்தில் அவனுடைய மகளிர் பெருவளமிக்க மலையுச்சியில் ஏறி, பகைவரின் படையிலிருந்த குதிரைகளை எண்ணி மகிழ்வர். ஆனால் இன்று பாரியின் மறைவிற்குப் பின் மகளிர் சிறிய வீட்டில் சுரை படர்ந்த, ஈத்திலைக் குப்பையின் மீதேறி உப்பு வண்டிகளை எண்ணுகின்றனர். இப்பாடல் பறம்பின் அன்றைய இன்றைய நிலைகள் மற்றும் பாரி மகளிரின் அன்றைய இன்றைய நிலைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகிறது. இக்காட்சி வருணனை கபிலருக்கும் பாரிக்குமானப் பிரிவுத்துயரை விட பாரிமகளிரைக் காக்கும் பொறுப்பு கபிலருக்கிருப்பதை அவர் உணர்ந்த தருணமாகவே கருதத் தோன்றுகிறது. ஏனெனில் செல்வச்செழிப்பில் தந்தையுடன் மகிழ்ச்சியான பாரியின் பெண்களைக் கண்ட கபிலர் இன்று வறுமையில் தந்தையற்று துயரத்தில் வாடும் பாரியின் பெண்களைக் காண்கிறார். தன் நண்பன் பாரியின் கடமையை அவன் இறப்பிற்குப் பின் தன் கடமையாக ஏற்றுக் கொள்கிறார்.

"கற்பனைக்கு அதிக இடமளிக்க அவகாசம் இருக்குமானால் அது கவிஞனின் உண்மையான துயரைக் காட்டாது" (புதுப்பார்வைகளில் புறநானூறு, ப.மருதநாயகம்,ப.206)

என்ற திறனாய்வாளர் ஜான்சனின் கருத்தோடு ஒப்பிட்டால் இங்கு கற்பனைக்கு இடமில்லை என்பதைத் தெளிவாக உணரமுடியும். கபிலரின் உள்ளக்குமுறல் செயற்கைத்தனமின்றி வெளிப்படுகிறது. தம் துயரத்தைப் பாரிமகளிர் நிலை கண்டு ஏற்பட்டதாகக் கூறுவதில் தம் துயரை நேரடியாக இணைப்பதைத் தவிர்க்கிறார். தன் துயரினும் கொடியது இம்மகளிரின் நிலை. அதனால் தான் அம்மகளிருக்காக வருந்தி தன் வாழ்நாள் கெடுவதாக என்று பாடியதில் கபிலரின் நட்புக் கடமை புலனாகின்றது. இனியும் பறம்பில் இருப்பது வீண் வருத்தத்தை அதிகப்படுத்தும் என்பதை உணர்ந்த கபிலர் பாரி மகளிருக்குத் திருமணம் முடிக்கவேண்டி அவர்களையும் அழைத்துக் கொண்டு பறம்பு மலையை விடுத்து வெளியேறுகிறார்.

**நன்றி மறவாக் கபிலர்**

நன்றி மறவாதவன் மனிதன் என்பதற்கிணங்க சிறந்த மனிதனாக திகழ்ந்தவர் கபிலர். மதுவிருந்த சாடி வாய் திறக்க, ஆட்டுக்கிடாயையும், ஊன்சோற்றையும் இரவலர்க்குத் தரும் பறம்பு மலையே! நீ எம்மோடு நட்புச் செய்தாய். இப்போது பாரி இறந்தானாக! மனம் கலங்கி, செயலிழந்து, கண்களில்

கண்ணீர் பெருக்கெடுக்க நின்னைத் தொழுது வாழ்த்திப் பாரிமகளிரது தலைவனைத் தேடிச் செல்கின்றோம்.

"இனியே பாரி மாய்ந்தென, கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுது – நிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே! "

(புறநானூறு, பா.எ-113)

கபிலர் பறம்பு நாட்டைப் பிரியும்போது தமக்கு இத்தனை காலமாக உணவும,; உறையுளும் தந்து இன்புறுவித்த பறம்பின் மீதான தனது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இப்பாடலைப் பாடுகிறார். 'குறிஞ்சிக்கோர் கபிலன்' என்று புகழ்பெற்ற கபிலர் குறிஞ்சிநிலத்தை விட்டு தன் நண்பனைப் பிரிந்து தன் நண்பனின் கடமையைத் தன் கடமையாக ஏற்றுக்கொண்டு கண்ணீர் மல்க விடைபெறும் போது,

"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற"

(புறநானூறு, பா.எ-114)

என்பதில் பாரி இருந்த போது காண்பவர்க்கு பறம்புமலை புகழ்வடிவாய்க் காட்சியளித்தது. காணாதவர்க்குச் செவி வழிச் செய்தியால் தெரிந்தது. ஆனால் இனி அவன் இல்லாததால் பறம்பு மலை பிறமலை போல கண்ணுக்குப் புலனாகக் கூடிய மலையாக மட்டுமே இருக்குமே என்று வேதனையுறுகிறார். மற்றொரு பாடலில் 'பகைவேந்தர்க்கு இ;ன்னாதவனும், தனக்கு இனியவனுமாகிய பாரியின் பறம்புமலை இனி கழிந்தது' எனப் புலம்பியவாறு கையற்று வெளியேறுகிறார்.

**வேண்டுகோள்**

மலைநாடன் விச்சிக்கோவிடம் சென்ற கபிலர், 'முல்லைக் கொடி தனக்கு வேண்டுமென்ற பரிசிலைக் கேட்கும் தன்மையற்றதாயினும் அதற்குத் தன் தேரையே பரிசிலாகத் தந்த பாரியின் மகளிர் இவர். யான் பரிசில் பெற வந்த அந்தணன். பரிசிலாக இவ்விருவரையும் ஏற்றுக்கொள்க!';; என கூற அவன் வறுமையில் வாடும் மகளிரை ஏற்க மறுக்கிறான். அதற்கு பின் இருங்கோவேளிடம் சென்று தன் எண்ணத்தை நயம்பட உரைக்கிறார்.

"பறம்பின் கோமான் நெடுமாப் பாரி மகளிர்: யானே
தந்தை தோழன்: இவர் என் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே"

(புறநானூறு, பா.எ- 201)

என்று ஒரு தகப்பனாக மணம்முடிக்கத் துடிக்கும் கபிலரிடம் நட்பின் மேன்மை புலனாகின்றது. அவன் மறுத்ததும் புலவராக அவனுக்கு அறிவுறத்தவும் தவறவில்லை. உன் முன்னோருள் ஒருவன் கழாஅத்தலையார் என்ற புலவனை இகழ்ந்ததால் அரையம் எனும் பெருஞ்செல்வமிக்க ஊர் அழிந்தது. நீ மூவேந்தரிடம் கொண்ட அச்சத்தால் பாரி மகளிரை ஏற்க மறுக்கிறாய். இவ்வாறு இகழ்ந்தமையால் நின் காலத்தும் அரையம் கெடும் என்று எச்சரித்தும், உன்னைப் போன்ற அறிவினன் என்று மூதாதையரோடு அவனையும் இகழ்ந்து விடைபெறுகிறார்.

**அடைக்கலம்**

பெரும்பொருளின்றி பாரிமகளிரை மணம்முடித்துக் கொடுக்கவியலாது என்பதை உணர்ந்த கபிலர் பொருள்தேட வேண்டியதன் அவசியத்தை அறிந்தார். பாரி மகளிருடன் சென்று பொருளீட்ட முற்படுவது உகந்ததாகாது என்று தன் உறவுமுறையைச் சார்ந்த அந்தணனைக் கண்டார். “தான் பொருளீட்டி வரும்வரை இவ்விருவரையும் குறைவிலாது காத்திடுக” எனத் திருக்கோவிலூரில் வாழும் அந்தணனிடம் பாரிமகளிரை ஒப்படைத்துவிட்டு முயற்சியை மேற்கொண்டார். அவர் மனம் முழுக்க பாரியின் மீதான எண்ணவோட்டமே நிறைந்திருந்தது. அவரின் பிரிவுத்துயரை விட பாரிமகளிரின் மணம் குறித்தான வேதனை மிகுந்திருந்தது. நட்பிற்காய் வடக்கிருந்து உயிர்துறத்தலினும் பாரி விட்டுச்சென்றுள்ள நட்புக்கடன் முந்துறவே பொருள்தரும் மன்னரை நாடிப் பயணம் மேற்கொண்டார்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பாரி வீழ்ச்சியுற்றதால் கபிலர் இவ்வேந்தர்களை நாடிப் பொருள் பெறும் எண்ணம் கொண்டாரில்லை. குறுநில மன்னர்களை நாடிச் செல்ல தீர்மானித்தார். இணையற்ற வள்ளல் பண்பினையுடைய கடையெழு வள்ளல்களில் ஒருவனாக வைத்து மதிக்கப்பட்டவன் திருமுடிக்காரி. அந்நாளில் பெண்ணையாற்றங்கரைப் பகுதியில் உள்ள மலாடு என வழங்கும் மலைமானாட்டைத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் துஞ்சா முழவினையுடைய காரியிடம் சென்றார் கபிலர்.

கடல்நீராலும், பகைவராலும் அழிக்கமுடியாத நின்னாடு யாகம் புரியும் அந்தணர்க்குரியது. அளவில்லாத செல்வமும், துணிச்சல்மிக்க படைகளும் கொண்ட மூவேந்தர்களில் ஒவ்வொருவரும் தங்கள் ஆதரவை விரும்பி விலைமதிப்பற்ற பொருட்களை வழங்குவர். அப்பொருட்கள் பரிசிலர்க்குரியதே. அருந்ததியையொத்த கற்பினையுடைய நின் மனைவியின் தோள் மட்டுமே நினக்குரியது. அதைத்தவிர வேறு பொருட்கள் இல்லையாயினும் நீ பெருஞ்செருக்குடன் இருப்பதற்கு காரணம் என்னவோ? எனக் கேட்பதில் காரி மூவேந்தருடன் நட்புக்கொண்டவன். போ'ிக்காலங்களில் அவர்களுக்கு உறுதுணையாக படைகளை அனுப்பக்கூடியவன். இதனால் மூவேந்தர் இவனது நாட்டை அழிக்கமுற்படார். எனவே இவனிடம் பரிசில் பெறலாம் என்று கபிலர் சிந்தித்திருக்கலாம் என கருதத் தோன்றுகிறது.

மதுவுண்ட மகிழ்ச்சிப்பெருக்கில் இரவலர்க்கு பரிசிலாக தேர்களைத் தரும் மன்னர்கள் உண்டு . ஆனால் காரியோ மதுமயக்கத்தில் இல்லாதபோதும் இரவலர்க்கு வேண்டிய தேர்களைப் பரிசிலாக வழங்கும் பண்புடையுவன். தீயநாட்களில் சென்றால் சென்ற காரியம் கைகூடுவதில்லை. செல்லும் வழியில் பறவைச் சகுனம் சரியில்லையாயின் செயலில் வெற்றி கிட்டுவதில்லை. காலமற்ற காலத்தில் சென்றால் செயல் நடப்பதில்லை. ஆனால் நாளல்லாத நாளிலும், புள் இடைப்பட்டு தடுப்பினும், காண்பதற்கரிய காலத்தில் சென்று வளமில்லா பாடல்களைப் பாடினும் காரியைப் பாடிய புலவர்கள் பரிசில் பெறாமல் வெறுங்கையுடன் திரும்புவதில்லை எனப் புகழ்ந்து பாடுகிறார்.

கபிலரின் புலமையையும், பெருமையையும் முற்றும் உணராததலோ சூழ்நிலை சரியின்மையாலோ காரி பாணர், விறலியரோடு கபிலரையும் ஒப்பவைத்து சிறிதளவே பொருள் தருகிறான். கபிலர் வருந்தியபோதும் மனம் தளராது, மாவண் தோன்றலே! வள்ளல் ஒருவனை நாடி நான்கு திசைகளிலும் உள்ள பரிசிலர் பலரும் வருவர். அவர் தகுதி அறிந்து பரிசில் நல்குவது அரிது. கொடுத்தல் மிகவும் எளிது.

"அது நற்கு அறிந்தனை ஆயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே! "

(புறநானூறு, பா.எ-121)

அனைத்து புலவர்களையும் பொதுமை நோக்காக நோக்கிப் பரிசில் தருவதைத் தவிர்ப்பாயாக எனக் கபிலர் அறிவுறுத்துவதில் தவறை நயத்துடன் சுட்டிக்காட்டும் நுண்ணறிவும், அஞ்சாது எடுத்துரைக்கும் துணிச்சலும் வெளிப்படுகிறது. கபிலர் மனதில் பாரி தன் தகுதியறிந்து நடத்திய முறையே இவ்வாறு வெளிப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. நட்பின் அடிப்படையே ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பது. அப்பண்பில் சிறந்தவராக கபிலர் - பாரி இருந்தனர் என்றால் அது மிகையாகாது.

**கடமை தவறா கபிலர்**

மயிலுக்குப் போர்வை வழங்கிய வள்ளல் பேகனைக் காணும்பொருட்டு கபிலர் மலைநாடு சென்றார். அங்கு பேகனின் மனைவி கண்ணகி, யாம் அவர்க்கு கிளைஞரேம் அல்லேம் எனக் கண்ணீருடன் மொழிந்ததும் கபிலர் உண்மைநிலை அறிந்தார். மனைவியைப் பரிந்து பரத்தையிடத்தில் தங்கியிருந்த பேகனைக் கண்டு நின் வீட்டின் வாயிலில் நின்னையும் மலையையும் பாடி துயரத்துடன் கண்ணீரை நிறுத்தமாட்டாதவளாய் குழல் இரங்கி ஒலிப்பது போல அழுத அருளத்தக்க அவள் யாரோ? என்று பேகனின் தவறை இடித்துரைத்தவர். பாரிமகளிரின் துயரைத் துடைப்பது மட்டும் தன் கடமையாகக் கருதாமல் சுயநலமற்று அரசன் நெறிதவறிச் செல்ல புலவராய் அவனை இடித்துரைத்து நன்னெறிப்படுத்தியவர் கபிலர்.

கபிலர் சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கண்டு பாட முற்படுகிறார். பாரியின் அன்புக்கும், வள்ளல் தன்மைக்கும், நட்புக்கம் மேலான பண்புகள் கொண்டவராக பிறமன்னரை

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

எண்ணிப் பார்க்காதவர். சேரனைக் கண்டதும் கபிலரின் மனக்கண்ணில் பாரியே தோற்றம் பெறுகிறான். பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் முதற்பாடலிலேயே கபிலர் பாரியை முன்வைத்தே வாழியாதனைப் பாடினாh்ர்.

"புலர்ந்த சாந்தின் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேண் புலம்படர்ந்தோன் அளிக்க என
இரக்கு வாரேன்"

(பதிற்றுப்பத்து பா.எ-61)

என்பதில் பாரியையும், பறம்பு மலையையும், தன்னுறவையும் எடுத்துக் கூறி அதற்குப் பின் உனக்கு இல்லாத புகழை இருப்பதாக கூறி உயர்த்திப் பாடமாட்டேன் என்றுரைப்பதில் கபிலரின் நட்பு மிளிர்கிறது. சில காலம் சேரனுடன் இணைந்து வாழ்ந்தார்.

"கபிலரும், கடுங்கோ வாழியாதனும் நெருங்கிய கேண்மையர் ஆயினும் கபிலருக்கும் பாரிக்கும் உள்ள உறவு என்று கூறமுடியாது. கபிலரும், பாரியும் இருதலைப் புள்ளின் ஒருயிர் போல வாழ்ந்தனர். ஆனால் கடுங்கோ வாழியாதன், கபிலரின் செந்நாத்திறமும் நன்றி மறவாப் பண்பும் அறிந்தவன். ஆதலின் கபிலரை ஒருபடி உயர்ந்தவராகவே கருதி நட்புப் பூண்டான். கபிலர், பாரியின் பகழ்பாடும் பண்பாளர். பாரி இறந்தபின் பாரியின் மகளிருக்காக வள்ளல்கள் பலரை நாடிய நன்றியாளர். தவறு கண்டபோது திருத்தும் சான்றாளர்." ( கபிலர் - ச.மெய்யப்பன்;, ப.எ-61)
என்னும் கருத்து குறிப்பிடத்தக்கது. கபிலரின் புலமையில் மனம் மயங்கிய சேரன் வாழியாதன் கபிலருக்கு நூறாயிரம் காணம் பொன்னோடு, நன்றா என்னும் குன்றில் நி;ன்று கண்ணுக்கெட்டிண துர்ரம்வரை காணுகின்ற நிலப்பரப்பைப் பரிசாகத் தந்து மகிழ்ந்தான். மனநிறைவுடன் திரும்பிய கபிலர் அந்தண நண்பனுக்கு பொருள் தந்துவிட்டு, பாரிமகளிருடன் திருமுடிக்காரியிடம் சென்றார். காரியின் மக்களுக்கு பாரியின் மகளிரை மணம்முடித்துக் கொடுத்து தன் கடமையைத் தீர்த்தார். பாரியின் நினைவு கபிலரை வாட்ட, இனியும் அவர் உயிர்வாழ விரும்பவில்லை. பாரி அடக்கம் செய்யப்பட்ட இடத்தை அடைந்து அவனை நினைத்துப் பாடினார்.

நீ உயிர்நீத்துச் செல்லும்போது உடன்வர விரும்பிய என்னை விடுத்து இங்கே இருக்கும்படி கூறி பிரிந்து சென்றாய். இது நட்பிற்கு ஏற்றதல்லவாயினும் நான் ஆமற்கொணண்டேன். இப்பிறவியில் இருவரும் மனமொன்றி நட்புடன் வாழ்ந்தது போலவே மறுமையிலும் உன் நண்பனாய்க் கூடி வாழ உயர்ந்த ஊழ் துணையிருக்குமாக என்று கையறுநிலையில் தன் விருப்பத்தை வலியுறுத்தி வடக்கிருந்து உயிர்நீத்தார். திருக்கோவலூர் கல்வெட்டு கபிலர் பெண்ணையாற்றங்கரையை அடைந்து அங்கே தீப்புகுந்து உயிர்நீத்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

"கபிலன் மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை

*அலைபுனல் அழுவத் தந்தரிடஞ் செல*
*மினல்புகுங் வீடுபே றெண்ணிக்*
*கனல் புகுங் கபிலர்க்கு"*

(திருக்கோவலூர் பாடல் கல்வெட்டு, தென்னிந்திய சாசனங்கள் தொகுதி-7,ப.எ.863)

*எவ்வாறாயினும் பாரியின் மறைவுக்குப் பின்னர் கபிலர் பாரிக்காகவே உயிர்நீத்தார் என்ற செய்தியை அறியமுடிகிறது.*

**தொகுப்புரை**

*புலமை என்பதே அறிவின் நிறைவு. இத்தகைய பண்புடைய புலவர்களால் தாம் வாழும் நாளிலேயே அதிழகமாக பாராட்டப்பட்டவர் கபிலர். இவர் பாரியின் உயிர் நண்பர்.. பாரி மலையின் இயற்கை வளமே கபிலரைக் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாட வைத்தது என்பது புலனாகும். முல்லைக்கொடியின் நிலைகண்டு இரங்கி தேர் வழங்கிய வள்ளல் பாரி ஆண்மையும், ஆற்றலும் நிறைந்தவன். பாரியிடம் பரிசில் பெறச் சென்ற கபிலர் அவனுடைய பரந்த உள்ளமும், களங்கமற்ற செயலும் அறிந்து வியப்புற்றான். கபிலரின் துணையைப் பெரிதாக விரும்பிய பாரியும் அவரை பறம்பு மலையில் தங்குமாறு வேண்டுகோள் விடுத்தான். இருவரும்ட இருதலைப்புள்ளின் ஓருயிராக மாறினர். பாரியின் வள்ளல் தன்மைக்கு நிகராக கபிலர் இயற்கையின் கூறாகிய மழையை உவமித்ததோடு பாரியைத் தெய்வமாக உவமித்ததில் அவருடைய அபரிமிதமான அன்பு வெளிப்படுகிறது.*

*மகட்கொடை மறுத்த பாரியின் பறம்புமலையை மூவேந்தர் முற்றுகையிட கபிலர், கிளிகளைப் பயிற்றுவித்து அவற்றை அரணுக்கு வெளியே அனுப்பி தினைக்கதிர்களைக் கொய்து வரச்செய்ததில் கபிலரின் இடுக்கண் களையும் நட்பின் மேன்மை புலனாகிறது. மூவேந்தர், பேகன், விச்சிக்கோ, இருங்கோவேள் என அரசர்களுக்கு வழங்கும் அறிவுரையிலும் சிறந்த பண்படையவராய்த் திகழும் கபிலர் பாரியின் இறப்பிற்கு பின் பாரிமகளிருக்கு தந்தையாய் மாறினார். புறம்புமலையின் அன்றைய நிலை, இன்றைய நிலை என வருணிப்பதில் இயற்கையைக் கடந்து பிரிவுணர்ச்சி மேலோங்குவதில் கபிலரின் நட்பு தெளிவாகிறது. பாரிமகளிரின் திருமணத்தையே தன் குறிக்கோளாக கொண்டு செயல்பட்டவர் மணம்முடித்ததும் நட்பினுக்காய் உயிர்நீத்த பெருமை கபிலரையே சாரும். படையிலும், கொடையிலும் சிறந்தவன் பாரி. நட்பிற்காகவே வாழ்ந்து, போராடி உயிர்நீத்தவர் கபிலர். இவ்விருவர் நட்புறவு இவ்வுலகம் உள்ளவரையில் நிலைத்து உரைக்கப்படும் என்பது திண்ணம்.*

***பார்வை நூல்கள்***

1.கு.வெ. பாலசுப்ரமணியன் (உ.ஆ) – புறநானூறு

2.வ.சுப மாணிக்கம் - தமிழ்க்காதல்

3.தொல்காப்பியம் - பொருளதிகாரம்

4.ஔவையார் - மூதுரை

5.ப.மருதநாயகம் - புதுப்பார்வைகளில் புறநானூர்று

6.ச.மெய்யப்பன் - கபிலர்

7.சு.தண்டபாணி – நட்புக்கோர் கபிலர்

8.கா.அரங்கசாமி – கபிலர்

9.திருக்கோவலூர் பாடல் கல்வெட்டு, தென்னிந்திய சாசனங்கள் தொகுதி-7